International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தோல் புதினம் காட்டும் பெண்களின் அவலநிலை

**கி. அன்பரசி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ச. வனிதா**
உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002

## முன்னுரை

"மங்கையராய்ப் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"[1]

என்ற கவிமணியின் கூற்றிற்கிணங்க பெண்கள் இன்றும் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். பெண்களால் நல்ல குடும்பங்கள் உருவாகின்றன. சீரான குடும்பங்களால் வளமான சமுதாயம் அமைகிறது. ஆயினும் சமுதாய அமைப்பு பெண்களைப் பலவீனப் படுத்துவதாகவும் அமைந்துள்ளது. பெண்களின் வாழ்க்கையானது சிக்கல்கள் நிறைந்ததாகவும் போராட்டங்கள் மிகுந்ததாகவும் காணப்படுகிறது.

அந்நிலையில் டி. செல்வராஜ் அவர்களின் தோல் நாவலில் இடம்பெற்றுள்ள பெண்களின் அவல நிலையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## தோல் நாவலின் அமைப்பு

எழுத்தாளர் டி. செல்வராஜ் அவர்களால் 2010ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஒரு மாபெரும் படைப்பு தோல் நாவலாகும். இந்நாவலுக்கு 2011ஆம் ஆண்டிற்கான 'இலக்கிய விருதும்' 2012ஆம் ஆண்டிற்கான 'சாகித்ய அகாதெமி' இந்நாவலுக்கு வழங்கப்பட்டது. இந்நாவல் 117 கதைமாந்தர் களைக் கொண்டு 26 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. தோல் நாவல் திண்டுக்கல் பகுதியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் அவல நிலையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது.[2]

## பெண்

பெண் என்பவள் கடவுளின் அவதாரம் என்பார்கள் சிலர். இன்னும் சிலர் அன்பு, ஒழுக்கம், பாசம், இரக்கம், பொறுமை இவற்றின் மொத்த உருவமாகக் கருதப்படுகிறாள்.

'பெண்' என்பதற்கு பாதுகாத்துப் பேணுதல் என்பது பொருள். இதனை மதுரைத் தமிழ் பேரகராதி பெண் என்பதற்கு,

"இற்றழை ஸ்திரி மனைவி விலங்கின பெண்மகள் சிறுமி மணமகள் விலங்கு பொது தாவரங்களின் பெடை"[3] எனக் கூறுகிறது.

## குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை

குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை என்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் புதிய விஷயமில்லை. இந்தியாவில் தொன்று தொட்டு பாலியல் வன்முறை நடந்து வந்துள்ளது. "பெரும்பாலும் பின்தங்கிய மற்றும் கிராமப்புறம் சார்ந்த பொருளாதார ரீதியாகவும் சாதி ரீதியாகவும்

நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சார்ந்த குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்"

புதிதாக துப்புறவுப் பணியாளராக நியமிக்கப்பட்ட இறந்து போன இருளப்ப பகடையின் மகள் பொம்மியம்மாள் என்கிற பதினாறு வயதுக் குமரியின் உடல் வாகில் லயித்துப் போன வேலு நாயக்கன் அவளைத் தன் வலையில் சிக்க வைக்கும் நோக்கில் அவளிடம் ஆசை வார்த்தை பேசி மார்பில் கையைப் போட்டு விட்டான். அனாதைப் பெண் அவனை மடக்கிப் போடலாம் என்பது வேலுநாயக்கனின் திட்டம்.[4]

தோல் ஷாப்பில் உழைக்கும் பெண்கள் ஒவ்வொரு நொடியும் பாதுகாப்பின்றி வாழும் அவல நிலையை நாவல் வழி காணப்படுகிறது. முதலாளித்துவ வர்க்கத்தினரால் பெண்களுக்கு ஏற்படக்கூடிய பாலியல் வன்கொடுமைகளை உணர்வு பொங்க டி. செல்வராஜ் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்.

### பெண்கள் பணிபுரியம் இடங்களில் பாலியல் வன்முறைகள்

அழகான பெண் ஒருத்தி ஏழையாகவும் சாதியால் தாழ்ந்தவளாகவும் இருந்துவிட்டால் பணத்தின் துணையுடனும் அதிகாரத்தின் துணையுடனும் அவளை வசப்படுத்த முயல்வது பணமும் அதிகாரமும் படைத்தவர்களின் இயல்பாகும்.

பெண்கள் பணிபுரியும் இடங்களில் அதிகாரத்தில் இருக்கும் நபர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது காம இச்சைக்கு இணங்கும் வகையில் பெண்களை கட்டாயப்படத்தி துன்புறுத்தும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. சில அதிகாரிகளின் இவ்வகையான தவறான நடத்தைக்கு இணங்காதவர்களுக்கு பயமுறுத்தல் களும் வேறு வகையான தொந்தரவுகளும் கொடுக்கின்றனர்.[5]

நிர்வாண கோலத்தில் குற்றுயிரும், கொலையுயி ருமாக உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சின்னக்கிளியைப் பூச்சிநாயக்கன் பட்டி மினிசாமி தூக்கி வந்து ஸ்டோர் ரூமுக்கு வெளியே போட்டான். அந்தப் பெண்ணின் பரிதாபக் கோலத்தைப் பார்த்த பெண்கள் கதறி அழுதனர். அந்தப் பெண்ணின் யோனி பிளந்து உதிரம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. தாமரை மொட்டுக்கள் பொன்ற மார்பகங்கள் கடித்து குதறப் பட்டு சிதைந்து போயிருந்தன.

### அடிமை நிலை

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"**

அச்சம்-நாணம், மடம் என்பதை பெண்ணுக்குரிய குணங்களாக தொல்காப்பியர் சொல்கிறார். அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், ஒழுக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும் என திரு.வி.க. பெண்மைக்கு விளக்கம் அளிக்கிறார். ஆனால் காலங்காலமாக பல அடிமைத்தனத்தில் அடிமைப்பட்டு கிடக்கும் பெண்களின் நிலையை நேரில் கண்டு உணர்ந்தவர் டி. செல்வராஜ் அவர்கள் பெண்களின் அடிமை நிலையை கூறியுள்ளார்.

கழுவனிடம் வட்டிக்கு வாங்கினால் ஜென்மா ஜென்மத்துக் கடன் தொலையாது கடன் வாங்கிய முனிசிப்பல் சிப்பந்தியின் மனைவி பெண்டு பிள்ளைகள் மாதாந்தரம் வட்டிக்கு தர வேண்டிய வட்டிக்கு பதிலாகக் கழுவனுடன் படுத்துக்கொள்ள வேண்டும். யாராவது ரோஷப் பட்டால் அடி உதைத்தான். "வட்டிக்கோசுரம் என்னையத்தான் அடுமையா வச்சிருக்கையே சாமி எம்புள்ளைய விட்டுப்பொடு பச்சைப்புள்ள தாங்காது" என்றுப ரிதாபமாகச் சொன்ன வீராயி கழுவனின் காலில் விழுகிறாள்.

"ஏளா ஒங்கூடப் படுத்துப்படுத்து மனிசனுக்கு அலுப்புத் தட்டிப் போச்சுது அதான் சமஞ்ச குமரியக் கேக்கறேன். கிராக்கி பண்றயே மண்ணு திங்கர ஒடம்பை மனிசன் அனுபவிச்சா என்ன அழுகிப் வோவப் போரது ஒம்மவ என்ன ராசா வூட்டுப் பெண்ணா.

**"சாமை வெளஞ்சாத் தெரியும் சக்கிலிச்சி சமைஞ்சாத் தெரியும்"[6]**

வக்காளி சும்மா செலவடை சொல்லலை தயாழி ஒம்மவளை அப்படியே விழுங்கிட்டு கக்கீரலாம் போல இருக்கு. அம்புட்டு அம்சமா இருக்கா புள்ள என்றவன் திடீரென்று சிறுமி ஆண்டாள் கையைப் பிடித்து பக்கத்து குடிசைக்கு இழுத்துப் போக முற்பட்டபோது "நயினா" நயினா நீவு பாரு நயினா ஒத்து நான் மாட்டேன் மாட்டேன் என்று வேட்டை நாயிடம் சிக்கிய மானாகக் கதறியது அந்தச் சிறுமி.

### அடித்தள பெண்களக்கு எதிரான பாலியல்

சமூக அங்கீகாரத்துடன் இந்த பாலியல் வன்முறை பெரும்பாலும் தீண்டத்தகாத சாதியினர் மீது உயர் சாதியினர் திணிக்கும் விஷயமாகவே இருந்து வந்துள்ளது. இதில் கடவுளுக்கு அர்பணித்தல் என்பது தாழ்த்தப்பட்ட சாதி பெண்கள் மீது உயர் சாதியினர் செலுத்தும் பாலியல் வன்முறையைப் பூசி மெழுகி மறைக்கவே பயன்பட்டுள்ளது. அடிததள மக்களின் ஏழ்மை பாதுகாப்பற்ற நிலை சாதிய இழிவு இவற்றைச் சாதகமாக கொண்டு உடலுறவுக்குக் கட்டுப்படுத்துவதும் அல்லது அதற்கு இணங்கிப் போவதை தவிர வழியில்லை என்ற நிலைக்கு அவர்களை ஆளாக்குவதும் பாலியல் வன்முறையாகும்.

இந்நாவலில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாவதை சிட்டம்மாள் என்ற கதாபாத்திரத்தின் மூலம் விளக்குகிறார் ஆசிரியர்.

“நா வெக்கத்தை விட்டுச் செப்புறேன் சாமி அந்த பேமானி புல்லுக்கட்டை நாவெலை பேசிட்டிருக்கும் போதுதான் வந்தான்”

“ஏளா புல்லுக்கட்டு எம்புட்டு வெலெ சொல்றேன்னான். அவ ஏடாசி பேசுகிறானின்னு பதில் பேசலை. அப்பால மல்லுக்கட்டுக்கு எம்பும்டுக் கேக்கறேன்னான். மருவாதையாய்ப் பேசுன்னேன். அவ்வளவுதான் அந்த சண்டாளன் அத்தனை சனங்க முன்னாலேயும் எம் மாராப்பு சேலையை வெலக்கிக் கட்டிப் புடிச்சு மார்பு ரெண்டையும் கசக்கி போட்டான். வண்டிக்காரங்க மட்டும் தடங்கல் பண்ணலையான என்ன அந்த மிருகம் பசாரிலேயே அல்லார் முன்னாலேயே கெடுத்திருக்கும்.[7]

**பொருந்தா மனம்**

திருமணம் என்பது ஆண் பெண் இருவரின் வாழ்விலும் மிக முக்கியமானதாகும். இதில் ஆண் பெண் தான் வாழப்போகும் வாழ்க்கை பற்றிய பல கனவுகளோடு இருப்பார்கள். ஆனால் பெற்றோர்கள் தன் பிள்ளைகளின் விருப்பங்களை கேட்காமல் எந்தவித பொருத்தங்களையும் பார்க்காமல் திருமணம் செய்து வைக்கின்றனர். பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் திருமணம் ஒரு பொறுப்பாக கடமையாக அமைகிறது. பொறுப்பை முடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் பெற்றோர் களின் மனதில் முதலில் காணப்படுகிறது. பிள்ளைகளின் வாழ்க்கை என்னவாகும் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. தொல்காப்பியர் கூறும்போது,

**“பிறப்பே குடிமை ஆண்மை யண்டோ**
**டுருவு நிறுத்த காமவாயில்**
**நிறையே யருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஓம்பினது வகையே”[8]**

இவையே தலைவன் தலைவிக்கு இருக்க வேண்டிய தகுதிகளாக கூறுகிறார். இத்தகைய தகுதிகள் இல்லாவிட்டால் தலைவன் தலைவி யிடம் திருமணம் நிகழும் போது பொருந்தா மனம் மாறுகிறது.

முத்துப்பேச்சி கடந்த மூன்று ஆண்டுகளாக அவன் தாலியை மார்பில் தாங்கிக்கொண்டு அலைந்தாளேயல்லாமல் அவன் வசப்படவில்லை. அவனுக்காக அவள் வயிற்றில் ஒரு புழுப்பூச்சிக் கூட உற்பத்தியாகவில்லை. அவனுக்காக வாரிசை உருவாக்கிவிடக்கூடாது என்கிற வைராக்கியத்தால் அவளது கர்ப்பக்கிரகத்தை காயப்போட்டு பாலைவனமாக வைத்திருக்கிறாள்.

சீ நீயெல்லாம் ஆம்பளையாடா பொட்டச்சிய அடிக்கிற பேமானி என்று சந்தனத்தேவனைப் பார்த்துக் கேட்டாள்.

**“நீயும் மாண்டாம் நீ கட்டின தாலியும்**
**மாண்டாம்”**

ஊரே எதிரொலிக்கச் சொன்னவள், திறந்து கிடந்த மார்பை அலங்கரித்த தாலியை அறுத்து வீதியில் வீசினாள். நிலை குலைந்து கிடந்த ஆடையையும் கூந்தலையும் சரிசெய்து அள்ளி முடிந்தவள் அந்த அகால இரவுப்போதில் வீட்டையும் அந்த ஊரையும் விட்டு நிதானமாக நடந்து போனாள் அவனையும் விட்டு நிரந்தரமாக.

**பெண்ணுக்குப் பெண்ணே எதிரி**

பெண் என்பவள் விட்டுக்கொடுத்துப் பொறுமையு டன் வாழ்பவள். சில நேரங்களில் சுயநலம் காரணமாகப் பெண்ணக்குப் பெண்ணே எதிரியாகி விடுகின்றாள். ஆண்களால் ஏற்படும் பிரச்சினைகளை விடப் பெண்களால் ஏற்படும் பிரச்சினைகளே அதிகம்.

**“பெண்ணே**
**ஆண்கள் மட்டும்தான்**
**எதிரி என்றெண்ணாதே?**
**பெண்ணுக்குப் பெண்ணே பெரும் எதிரியென்று**
**எண்ணி வெட்கிடு”[9]**

என்று பெண்ணுரிமை நூலில் ஜான் பிரிட்டோ குறிப்பிடுகிறார்.

வடித்தெடுக்கப்பட்ட அம்மன் சிலையை விடத் தானும் அழகாக இருக்கும் அக்னீஸ்மேரியின் வடிவழகையும் அவளது கட்டுமஸ்தான உடல் வாகையும் பார்த்து, பிரமித்து போன அம்மாளு அம்மாள் தனது மாய வலைக்குள் போட்டுக் கொள்ளும் தாஜா வேலைகளை செய்து பார்த்தாள். அதற்கு அவள் மசியவில்லை. பிறகு அவளுக்கும் அவளோடு சிறையில் இருக்கும் பெண்களுக்கான ரேஷனில் கை வைத்து கடுமையான பணிகளையும் கொடுத்து பார்த்தாள். அப்போதெல்லாம் எதிர்ப்புத் தான் மேலிட்டதல்லாமல் தனது தந்திரோபாயம் எல்லாம் பலிக்கவில்லை என்ற விசனத்தில் அம்மாளு அம்மாள், தனது விபச்சார தொழிலுக்கு இணக்கம் தர மறுத்த மலையாளக் குமரியை,

“வாடீண்டா வர மாட்டியோ நீயோ விபச்சார கேசுல வந்த முண்டை கண்ட பயவளுக்கெல்லாம் முந்தி விரிக்கிற வேசை பெரிய பத்தினயாட்டம் பாசாங்கு பண்றே” என்று சரமாரியாக வைதவண்ணம் அவளது குடுமியைப் பிடித்து இழுத்தாள்.

**வறுமை நிலை**

குடும்ப வாழ்க்கை தடையின்றி இயல்பாக

நடைபெறுவதற்கு வறுமை ஒரு பெருந்தடையாக உள்ளது என்பதை டி. செல்வராஜ் அவர்கள் இந்நாவலில் காட்டியுள்ளார்.

**"வறுமை தனிமனிதப் பிரச்சனையன்று ஒரு சமூகப் பிரச்சனை என்பார் மா. இராமலிங்கம்"**

வறுமை இன்று நேற்றல்ல தொன்று தொட்டே சமூகத்தைப் பெரிதும் பாதித்து வருகிறது என்று வறுமையின் அவலத்தினை டி. செல்வராஜ் அவர்கள் சுட்டியுள்ளார்.

ஏனைய தோல் பதனிடும் குடும்பங்களைப் போன்று பெரும்பாலான நாட்களில் அவள் குடிசை அடுப்பும் புகையாமல் கிடந்தது. மார்கெட்டில் குப்பை அள்ளிப் போட்டத்தில் கிடைத்ததைக் கொண்டு "வரகரிசி கஞ்சி" வைப்பதற்குத்தான் போதுமானதாக இருந்தது. ஏற்பட்ட அகோரப் பசியின் காரணமாகக் கஞ்சி முழுவதையும் குடித்து விட்டுப் பானையைக் கழுவி கவிழ்த்து வைத்துவிட்டுப் படுக்கப்போன பிறகுதான் ஓசேப்புக் குடிசையின் படலை தள்ளிக்கொண்டு வந்து நின்றான். அருகில் வந்து உட்கார்ந்து ஓசேப்பு **"பசிக்குது ஆத்தா ஏதாச்சும் இருந்தா குடிக்கக் குடுக்கையா"**[10] என்று கேட்டபோது, அவளது ஈரல் குலையே நடுங்கிப் போனது. அந்த அகால வேளையில் எங்கே போவது பக்கத்துக் குடிசைகளிலும் அவளைப் போன்ற அறைப் பட்டினியும், முழுப்பட்டினியும் கடா விளக்கை மட்டும் ஏற்றி வைத்துவிட்டு நிற்கும் அவளது கையறு நிலையை உணர்ந்தவனை போல் "ஆத்தா இப்படி வாயேன்" என்றவன் அவள் அருகில் வரவும், அவளது மடியில் முகம் புதைத்துப் படுத்துக்கொண்டான்.

**அவல நிலை**

கடவுளாக போற்றப்பட்ட தேவரடியார்கள் தேவதாசி ஆன பரிதாபம் பேராசிரியர் வடிவாம்பாள் குடும்பானது தஞ்சாவூர் விஜயாலய சோழன் காலம் முதல் பெரும் புகழ் பெற்ற ஆடல் பெண்டிரையும் பாடல் மகளிரையும் கொண்ட நீண்ட தேவரடியார்களைக் கொண்ட குடும்பமாகும். அண்ணாமலை சர்வகலா சாலையில் வடிவாம்வாம்பாள் மாணவியாகச் சேர்க்கப்பட்ட போது சங்கரன் பி.ஏ. ஹர்ணக்ஸ் முதலாம் ஆண்டு மாணவனாகப் பயின்று கொண்டிருந்தான். தனது இளமைக்கால விளையாட்டுத் தோழனான சங்கரனது படிப்புத் திறனும் தேசபக்த அரசியல் நடவடிக்கைகளும் வடிவாம்பாளை வெகுவாகக் கவர்ந்தது.

அவ்விருவரின் நட்பும், தோழமையும் மேலும் அதிகரித்து மேலும் அது காதலாக வலுப் பெற்றது. சுந்தரேச அய்யரை சந்திப்பதற்காக மாங்குடி வந்தபோது ஒருநாள் முழுவதும் வடிவாம்பாள் இல்லத்தில் கழித்து சேதி எப்படியோ வெளியாகி, காலும் கையும் கண்ணும் வைத்து ஜோடனை செய்யப்பட்டு அவளையும் சங்கரனையும் இணைத்து அக்ரகாரத்திலும் மாடத் தெருவிலும் கேவலமான சேதியாகப் பரப்பப்பட்டது. வெறும் வாயை மெல்லும் அம்மனுக்கு அவல் கிடைத்தாற் போன்ற அக்ரகாரத்து அம்மாமிகளுக்குப் புரணி பேசுவதற்கான அவதூறப் பரிணமித்திருந்தது.

"என்ன இருந்தாலும் தேவதாசி தேவதாசி தான் குலத்தோடு வந்த குணம் அவளை விட்டு போகாது"[11] என்றார்கள். "வடிவாம்பாளின் பிறவியோடு அவளது ஒழுக்கமும் கற்பும் கேள்விக்குறியாக்கப்பட்டு சகிக்க முடியாததாக இருந்தது. தெருவில் நடமாடுவதே அவமான கரமானதாகப்பட்டது. வேலையை முடித்து வந்தால் வீட்டோடும் தனது எண்ண அலைக ளோடும் முடங்கிப் போக வேண்டிய அவல நிலைக்கு வடிவாம்பாள் தள்ளப்பட்டு போனாள்.[12]

**முடிவுரை**

சமுதாயத்தில் நடக்கும் பல பிரச்சினைகளில் தொழிற்சாலைப் பிரச்சினைகளும் ஒன்றாகும். தொழிற்சாலையில் பெண்களுக்கு நடக்கும் குழந்தை மீதான பாலியல் வன்முறை, பெண்கள் பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறை, அடிமை நிலை, அடித்தள மக்களுக்கு எதிரான பாலியல் வன்முறை, பொருந்தாமனம், பெண்ணுக்குப் பெண் எதிரி, வறுமை நிலை, அவல நிலை போன்ற தோல் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்களின் இன்னல்களும், உணர்வுகளும் இந்நாவலில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பா. 740.
2. டி. செல்வராஜ், கி. லோகேஸ்வரி, ப. 24.
3. தமிழ் பேரகராதி, ப. 287.
4. மேலது., ப. 377.
5. சமூக பாலினம் பள்ளி மற்றும் சமுதாயம், ப. 128.
6. மேலது., ப. 3.
7. மேலது., ப. 234.
8. தொல்காப்பியம் பொருதிகாரம், ப. 165.
9. ஜான் பிரிட்டோ பெண்ணுரிமை, ப. 47.
10. மேலது., ப. 151.
11. மேலது., ப. 545.
12. மேலது., ப. 680.